

# காந்திநிகேதன் ஆசிரமம்

## தே.கல்லுப்பட்டி

நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களின்

115 வது பிறந்த நாள் மற்றும் ஆசிரமத்தின் 84 வது ஆண்டு விழா



# பாரதி கலைவிழா

**துவக்கி வைப்பவர்:**

நீதியரசர்

**G.R.சுவாமிநாதன் அவர்கள்**

மாண்புமிகு நீதிபதி

சென்னை உயர்நீதி மன்றம்

"வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!!"

இடம் - பள்ளிக் கலையரங்கம் நாள் - 27.07.2024

காலை -10.00 மணி



# காந்திநிகேதன் ஆசிரமம்

**தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.**

**நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி அவர்களின்**
**115 வது பிறந்த நாள் மற்றும் ஆசிரமத்தின் 84 வது ஆண்டு விழா**

## பாரதி கலை விழா - 27.07.2024

அன்புடையீர்,

வணக்கம். காந்திநிகேதனம் குழந்தைகளுக்காக ”பாரதி கலை விழா” என்னும் புதுமை முயற்சியினை வரும் ஜூலை 27 ஆம் நாள் 2024 அன்று துவக்குகின்றது.

பாரதி என்னும் இருள் நீக்கும் அகல் விளக்கு,
பாரத நாட்டிற்கு நம் தமிழ் மண் தந்த பெருங்கொடை

தமிழ் மண்ணின், பாரத நாட்டின் உயர் அற நெறிகளை பாரதியின் வழியாக குழந்தைகள் தெளிவுற அறிந்து கொள்வது இன்று மிகவும் அவசியம்.

நம் குழந்தைகள் பாரதியின் வழியில் வாழ்வினை கற்று மேன்மை பெற வேண்டும் என காந்திநிகேதன் எடுக்கும் முயற்சி இது

தமிழ் மண்ணில், இந்திய விடுதலை இயக்கத்திற்கும், காந்திய மரபுக்கும் சான்றாக எஞ்சி இருக்கும் விழுதுகளில் காந்திநிகேதனமும் ஒன்று. விடுதலை இயக்கத்தின் பாசறையாக 1940ல் துவங்கிய காந்திநிகேதனம் கடந்த 85 ஆண்டுகளாக பாரதியை கொண்டாடி வருகிறது.

காந்திநிகேதனம் தனது 85 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் புனிதமான தருணத்தில் வரும் ஜூலை 27 ஆம் நாள் சனிக்கிழமை பாரதி விழாவினை பாரதி கல்வி கலை விழா என ஆயிரம் குழந்தைகள் மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர்.

தாங்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

**காந்திநிகேதன் ஆசிரம சமுதாயம்.**